***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//91 /2024 |
| | : | Prosecution P.W - 8 |
| NAME | : | **நிர்மல்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 17.06.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019ம் வருடம் தென்காசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த 05.07.2019ம் வருடம் நான் பணியில் இருந்த போது அதிகாலை 12.30 மணியளவில் மயில்ராஜ் என்பவர் தானாகவே சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவரை விசாரித்த போது தன்னை அவரது வீட்டு அருகே அடையாளம் தெரிந்த நபர் 04.07.2019 அன்று இரவு 09.00 மணியளவில் அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. அவரது முன்தலையில் 4x2x1 cm அளவிலான சிதைந்த காயம் காணப்பட்டது.
2. அவரது வலது பக்க தோள்பட்டையில் பல்லால் கடித்த காயம் இருந்தது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சைக்கு அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று

வழங்கினேன். அந்த காயச்சான்று அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் காயம் பட்ட நபரை 06.07.2019 ம் தேதி அன்று சிகிச்சையில் இருந்து விடுவித்தேன்.

மேற்படி அன்றைய தினம் 05.07.2019 ம் தேதி அதிகாலை 12.40 மணிக்கு நான் பணியில் இருந்த போது ரகுகுமார் என்பவர் அவரது தாயார் தேவிகா பொன்மாரி என்பவருடன் சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவரை விசாரித்த போது தன் வீட்டு அருகே அடையாளம் தெரிந்த நபர் 04.07.2019 ம் தேதி இரவு 09.00 மணியளவில் தன்னை அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. இடது முன்னந்தலையில் 3x2x1 cm அளவிலான சிதைந்த காயம் காணப்பட்டது.
2. இடது காதில் 2x1x1 cm அளவிலான சிதைந்த காயம் காணப்பட்டது.
3. இடது தோள்பட்டையில் 2x1cm, 1x1 cm அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது

அவருக்கு வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என சான்றளித்தேன். மேற்படி **காயச்சான்று அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி காயங்களின் தன்மை ஒன்றுக்குமேற்பட்ட ஆயுதங்களால் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றால் ஆம். காயம் பட்ட நபர்கள் தங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் எந்த வகையான ஆயுதங்களால் ஏற்பட்டது என என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போதும் ஆயுதங்கள் எதையும் காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்ன வகையான ஆயுதங்களால் மேற்படி காயங்கள் ஏற்பட்டிருக்கும் என குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் இல்லை. பொதுவாக ஒவ்வொரு வகையான ஆயுதங்களுக்கும் ஒவ்வொரு வகையான காயம் ஏற்படும் என்றால் சரிதான். சிராய்ப்பு காயங்களும், சிதைந்த காயங்களும் என்ன வகையான ஆயுதங்களால் ஏற்பட்டது என போலிசார் விசாரணையில் நான் சொன்னேனா என்றால் இல்லை. சிதைந்த காயம் எப்போது ஏற்பட்டது என எனது காயசான்றிதழில் சொல்லி உள்ளேனா என்றால் காயம் புதிதான காயமாக இருந்தது. நான் சிகிச்சை அளிக்கும் போது இரத்த வடிதல் காயத்தில் இருந்ததா என்றால் ஆம். அவ்வாறு எனில் மேற்படி காயங்கள் என்னிடம் சிகிச்சைக்கு வருவதற்கு அரைமணி நேரம் அல்லது ஒரு மணிநேரத்திற்கு முன்பு கூட நடந்திருக்கலாம் என்றால் ஏற்பட்டிருக்கும்.

பொதுவாக பல்லால் கடிக்கும் போது ஏற்படக்கூடிய காயங்கள் வட்ட வடிவமாகவோ, நீள்வட்ட வடிவிலோ இருக்கும் என்றால் சரிதான். மயில்ராஜிக்கு பல்லால் கடித்ததாக நான் சொன்ன காயம் எந்த வடிவில் இருந்தது என்று காயசான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் வடிவம் குறிப்பிடவில்லை. ஒவ்வொருவரின் பல் அமைப்பிற்கு தகுந்தவாறு காயத்தின் அமைப்பு இருக்கும் என்றால் சரிதான். சில நேரங்களில் மேல்தாடை பற்களின் அழுத்தம் அதிகமாகவும், சில நேரங்களில் கீழ் தாடை பற்களின் அழுத்தம் அதிகமாகவும் இருக்கலாம் என்றால் சரிதான். என்னுடைய காயசான்றிதழில் அந்த விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக காயச்சான்று வழங்கும் போது உதவி ஆய்வாளர் எதிரியை என் முன்பு ஆஜர் படுத்தி அவருடைய பல்அமைப்பை ஒப்பிட்டு காயச்சான்று வழங்கினேனா என்றால் இல்லை. செங்கல்லை கொண்டு ஒருவரை தாக்கும் போது அந்த செங்கல் துகள்கள் காயத்தின் மீது இருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். மேற்படி இரண்டு நபர்களுக்கு ஏற்பட்ட காயங்களில் அவ்வாறு செங்கல் துகள்கள் இருந்ததாக காயச்சான்றில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தலையில் செங்களால் தாக்கும் போது சிதைந்த காயத்தோடு வீக்க காயமும் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி இரண்டு நபர்களுக்கு ஏற்பட்ட சிதைந்த காயத்திலோ, சிராய்ப்பு காயத்திலோ வீக்கம் ஏதும் இல்லை என்றால் மருத்துவமனை வரும் போது இல்லை. மேற்படி இரண்டு நபர்களுக்கும் ஏற்பட்ட சிதைந்த காயங்கள் தாழ்வான ஓட்டின் மீது தன்னிச்சையாக இடித்து கொள்வதால் கூட ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். அவ்வாறு இடித்து கீழே விழும் போது கூட சிராய்ப்பு காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் வாய்ப்பு உண்டு.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi